இலங்கை பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு ட்ரான்ஸ்பேரன்சி செயலகத்தில் புதிய பதவி

இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனலின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் பேர்லினில் உள்ள ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனத்தின் செலகத்தில் புதிய பதவியொன்றை ஏற்றுள்ளார். அவர் ஆசியப் பசுபிக் பிராந்தியத்திற்கான ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றுவார்.

2005இல் அவர் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனத்தில் இணைந்து கொண்டார். 2004ஆண்டு சுனாமியின் பின்னர் அதிக பெறுமதிவாய்ந்த செயற்திட்டங்களை அவர் வழிநடத்திவந்தார். பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் ஆலோசனைப் பிரிவின் பணிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

கிராமமட்ட அதிகாரிகளுக்கு ஆட்சிமுறை மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பான பயிற்சி

கிராமசேவை அதிகாரிகளுக்கு அவர்களது கடமைகள் மற்றும் நல்லாட்சி தொடர்பான இரு பயிற்சிநெறிகள் பொல்பித்திகமவில் இடம்பெற்றன. 69 பேர் இதில் பங்குபற்றினர். சட்டத்தரணி அபேரத்ன, முன்னாள் கணக்காளர் நாயகம் விஜேபால வத்தலா, குருணாகல் மேதிக மாவட்டச் செயலாளர் எச். எம். பீ. ஹிட்டிசேகர, பொல்பித்திகம பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஆர். ரத்னாயக்க மற்றும் மேலதிக பிரதேச செயலாளர் பீ.பீ. பொடிநேரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மற்றொரு செயலமர்வு மாகாண நிர்வாக அலுவலகங்களில் பொறுப்புக்கூறுதலை ஊக்குவிக்கும் விதத்தில் கடந்த செப்டம்பர் 16ஆம் திகதி அனுராதபுரத்தில் இடம்பெற்றது. நுவரகம்பலாத கிழக்கு பிரதேச செலகத்திற்திற்குட்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள் இதில் பயிற்றப்பட்டனர்.

கிராமசேவை அதிகாரிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், பொதுத்துறை அதிகாரி என்ற எண்ணவகையில் தேசத்தின் நேர்மைநிலையைக் கட்டியெழுப்பதில் அவருக்குள்ள பங்கு என்பன மற்றும் கலந்தாலோசனைகளும் இதில் இடம்பெற்றன. வளவாளர்களாக வடமத்திய மாகாண ஆளுனரின் செயலாளர் எம். எஸ். பீ ரத்னாயக்க, மதவாச்சிப் பிரதேச செயலாளர் பீ .எல் மதனாயக்க, இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுனத்தின் இயலுமை விருத்திப் பிரிவின் சுனந்த குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

தகவல் பெறுவதற்கான உரிமை பற்றி செயலமர்வு

இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் தகவல் பெறுவதற்கான உரிமையை தெளிவுபடுத்தும் செயலமர்வுகளை திட்டமிட்ட செயற்திட்டத்தின் கீழ் நடத்திவருகின்றது. கல்வித் துறைசார்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள், வேறும் ஆர்வமுள்ளவர்களுக்காக இச்செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன.

கடந்த செப்டம்பர் 14ஆம் திகதி திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவொன்று ஒருநாள் செயலமர்வில் பங்குகொண்டனர். இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனத்தின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ருக்ஷன நாணயக்கார ஆற்றல் மேம்பாட்டுப் பகுதியின் பணிப்பாளர் தில்குக்ஷி ஹற்துன்நெந்த் ஆகியோர் இதில் அளிக்கைகளை முன்வைத்தனர்.

இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் சம்மா (SAFMA) ஊடக அமைப்புடன் இணைந்து நடத்திய மற்றுமொரு செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் 22 பேர் கலந்துகொண்டனர். பிரிதொரு செயலமர்வில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைச் சேர்ந்த 18 ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். இந்தச் செயலமர்வு திருகோணமலையில் இடம்பெற்றது.

தேசிய நேர்மைத்திறன் விருது அளிக்கைள் டிசம்பர் 9ஆம் திகதி

ஏழாவது தடவையாக இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் ஐக்கியநாடுகள் ஊழல் எதிர்ப்பு தினத்தை நினைவு கூரவுள்ளது. டிசம்பர் மாதம் 9ஆம் திகதி இந்நிகழ்வும் தேசிய நேர்மைத் திறன் விருது வழங்கும் விழாவும் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

இதில் தெற்காசியாவின் தலைசிறந்த நல்லாட்சி மற்றும் ஜனநாயக ஊக்குவிப்பாளர் கனாக் மனி டிக்சித் கலந்துகொள்ளவுள்ளார்.

ஊழல் எதிர்பாளர்களின் பேங்கொக் சந்திப்பு

ஆசியப் பசுபிக் பிராந்தியக் கூட்டம்

ட்ரான்ஸ்பேரன்சியின் வருடாந்த அங்கத்துவக் கூட்டம்

இலங்கை ட்ரான்ஸ்பேரன்சியின் வருடாந்த அதிக்கையின் உத்தியோக பூர்வ வெளியீடு

சர்வதேச ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சியின் காட்சிக் கூடம்

உலக நேர்மை விருது வழங்கல் நிகழ்வு

நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்திபரிக்கை

நவம்பர் 2010

உள்ளே

3. வெளிவந்திருக்கின்றது 18ஆவது திருத்தச் சட்டம் மீதான கண்ணோட்ட அறிக்கை

4. அதிகரித்துவரும் ஊழல் சுட்டெண்

5. தகவல் பெறுவதற்கான உரிமை பற்றி செயலமர்வு

6. ஊழல் எதிர்பாளர்களின் பேங்கொக் சந்திப்பு

போத்தல ஜயந்தவுக்கு உலக நேர்மைத்திறன் விருது

புலனாய்வுச் செய்தியாளர் போத்தல ஜயந்த உலக நேர்மைத்திறன் விருதினை வென்றுள்ளார். இதனால் கௌரவத்திற்குரிய உலக நேர்மைத்திறன் விருதினை வெல்லும் இலங்கையின் இரண்டாவது ஊடகவியலாளர் எனும் பெருமையினை அவர் பெறுகின்றார். முதலாவது விருதினை, சன்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க பெற்றுக்கொண்டார். 2000ஆம் ஆண்டு ஆரம்பமான முதலாவது விருதுவழங்கல் வைபவத்தில் லசந்த விக்ரமதுங்கவுக்கு விருது வழங்கப்பட்டது.

இவ்விருவரும் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் லஞ்சம் மற்றும் முறைகேட்டுக்கு எதிராக உலகில் உழைக்கும் தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆர்வத்தினையும் உறுதிப்பாட்டினையும் ஊக்கப்படுத்தி, மறியபலிக்கும் வகையில் இவ்விருதினை வழங்கியுள்ளது.

போத்தலவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமாக தாக்குதல் முழுநாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்தத் தாக்குதல் போத்தலவை வலுவிலக்கச் செய்தது மாத்திரமன்றி, நவம்பர் மாதம் 12ஆம் திகதி பேங்கொக்கில் இடம்பெற்ற சர்வதேச ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பினையும் இல்லாமல் செய்தது. இதனால், போத்தல சார்பாக அவருக்குரிய விருதினை இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே. சீ வெலியமுன பெற்றுக்கொண்டார்.

போத்தன ஜயந்த 2004ஆம் ஆண்டு, இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு விருதிற்கான ஆரம்ப நிகழ்வுகளின் அளிக்கைகளின் போது வாயிலாக அவர் வழங்கிய பங்களிப்பிற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. தனக்கிருந்த அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து ஆகிய துறைகளில் நிகழும் முறைகேடுகள் தொடர்பாக அவர் தொடர்ச்சியாக எழுதிவந்தார்.

அதுமாத்தரமன்றி, சட்ட பூர்மற்ற தொழில் முகவர்கள், சிறுவர் முகாம்கள் மற்றும் வரியறவிடும் மையங்கள் என்பவைற்றில் இடம்பெறும் முறைகேடுகள் பற்றியும் அவர் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். இது குறித்த அவரது செய்திகள் ஒருவாரம் விட்டு மறுவாரம் வெளிவந்தன.

ஒருமைப்பாட்டிற்கான தன்மை முன்னிறுத்தி உயிரைப் பறிகொடுத்த மொஸகோ நாட்டு சட்டத்தரணி செர்கேய் மெஸ்னீட்ஸ்கி, கபோனஸைச் சேர்ந்த கிரிகரி நம்பவா மிஸ்டாகஆகியோரும் இந்த ஆண்டு இடம்பெற்ற விருதுவழங்கல் விழாவில் நேர்மைத்திறன் விருதுபெற்றனர்.

போத்தலவின் வாக்குறுதி

"இந்த விருது எனது வாழ்வில் எதிர்பிருக்கின்ற காலத்திலும் ஊழலுக்கு எதிராகப் போராடும் மேலதிகக் கடப்பாட்டினை எனக்கு தந்துள்ளது. எனது நாட்டில் மாத்திரமல்லாமல் முழு உலகிலும் ஊழலை இல்லாதொழிக்கும் பயணத்தில் நானும் சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கின்றது."

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நடத்திய ஊழலுக்கு எதிரான சர்வதேச மாநாட்டிற்கு அனுப்பி வைத்த செய்தியில் விருதினை வென்ற போத்தன ஜயன்த தன்னுடைய வாக்குறுதியினை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விருதுவழங்கல் விழாவில் கலந்துகொள்ள முயாத போத்தன ஜயந்த கருத்துத் தெரிவித்த போது சந்தேகமே இல்லாமல் இது என்னுடைய வாழ்வில் மிகமுக்கியமானதொரு தருணம்' எனக்கு குறிப்பிட்டார்.

தான் தொடர்பிலிருந்த பலவேறு நிறுவனங்களுக்குள் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கு தனியானவொரு இடமிருப்பதாகவும் அதன் உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட உச்சாகப் பங்களிப்பினை தான் மிகவும் மெச்சுவதாகவும் குறிப்பிட்டார். எனக்கு இத்தகைய ஒரு கௌரவத்தினை வழங்கிய ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் நிறுவனத்திற்கு எனது மனப்பூரமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றும் தனது அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் (TISL) நிறுவனத்தின் பணிப்பாரு ஜே. சீ வெலியமுன இப்போது ட்ரான்பேரன்சி இன்டர்நேஷனல் (TI) நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஊழலுக்கு எதிரான உலக நிறுவனங்களின் வருடாந்தக் கூட்டத்தில் வைத்தே அவர் தெரிவுசெய்யப்பபடார். இக்கூட்டம் அண்மையில் பேங்கொக் நகரில் இடம்பெற்றது.

இந்தத் தேர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த திரு. வெலியமுன தான் ஊழல் மற்றும் முறைகேடுகளற்ற ஒரு உலகினைத் தரிசிக்கும் முயற்சிக்காக தனது நேரத்தையும் சக்தியையும் செலவிடப் போவதாகத் தெரிவித்தார்.

12 பேர்களைக் கொண்ட ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் நிறுவனத்தின் சபைக்கு இரண்டு பணிப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். திரு. வெலியமுனவுடன் பிரான்ஸ நாட்டைச் சேர்ந்த ஜக்கியுஸ் டெரி என்பரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் நிறுவனத்தில் கொள்கையிற்றும் அதியுயர் பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள முதலாவது இலங்கையர் எனும் பெருமையைப் பெறும் திரு. வெலியமுன கடந்த எட்டு வருடங்களாக இலங்கை ட்ரான்பேரன்சி நிறுவனத்தை வழிநடத்தி வந்தார். அவரது மதிநுட்பமான தலைமைத்துவத்தின் கீழ் ஊழலுக்கு எதிராகச் செயற்படும் மிகச்சிறந்த நிறுவனமாக இலங்கை ட்ரான்பேரன்சி இன்டரனேஷலை உயர்த்தியிருக்கின்றார். உலகில் இயங்கும் ட்ரான்ஸ்பேரன்சி வலையபினைன் சிறந்த பங்காளியாகவும் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனத்தை மாற்றியுள்ளார். அவரது ஆக்கத்திறன் மிக்கத் தலைமைத்துவம் இலங்கை ட்ரான்பேரன்சி நிறுவனத்திற்கு தனியார், பொது மற்றும் சிவில் சமூகத்துறைகளில் பாரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மிகவும் சவாலான சூழ்நிலை இருந்த காலகட்டத்தில் இத்தகையதொரு அடைவு எய்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனலின் பணிப்பாளர் சபைக்கு இலங்கையர்

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்திபரிக்கை

நவம்பர் 2010

ஊழலின் இழப்பு

ஊழல் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுக்குன்றச் செய்கின்றது. அது மனித உரிமைகளை வன்முறைக்குற்படுத்துகின்றது. அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை குறைவடையச் செய்கின்றது. அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதிகளில் மேற்கொள்ளப்படும் மோசடி ஏழைமக்களை ஏற்றத்தாழ்வுடன் நடத்துகின்றது. சீறந்த சேவையை வழங்குவதற்குள்ள அரசாங்கத்தின் இயலுமையை வலுவிழக்கச் செய்கின்றது.

பல்வேறு நிதிநிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களினால் அபிவிருத்தியடைந்த நாடுகளின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிதியில் ஆண்டுதோறும் கையாடப்பட்ட அல்லது திருடப்பட்ட மொத்த தொகை பத்து மடங்கால் அதிகரித்து வருகின்றது. இது சுமார் 100 பில்லியன் அமெரிக்க டொளர்களைத் தாண்டும் நிலையல் உள்ளது.

உலகவங்கியின் ஆய்வுகள் ஊழலைக் குறைத்து, சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்துவதன் வாயிலாக இந்நாடுகள் தமது தேசிய வருமானத்தை நீண்ட கால அடிப்படையில், நான்கு மடங்காக மாற்றிக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கின்றன.

ஊழலுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடுவோம்

எங்களுடன் இணையுங்கள்
28/1, புள்ளல் லேன், கொழும்பு - 07.
தொலைபேச் :0112 501474
தொலைநகல் :0112 592287
facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

நேர்காணல்:

ஜனநாயகம் மக்களுக்குச் சொந்தமானது

நேபாள ஊடகவியலாளரும் செயற்பாட்டாளருமான கனாக் மனி டிக்சித் எதிர்வரும் டிசம்பர் 9ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல்வ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள உள்ளார்.

Image: www.prabin.com

கனாக் மனி டிக்சித் நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் அலுவலகச் கலர் பிரகரம் ஒன்றை நடாத்திவருகின்றார். அது இனிய உலகப் படமாகக் காட்சி தருகின்றது. இது மிகமுக்கியமான வாதத்தொனிப் பொருட்களைப் புலப்படுத்தி நிற்கின்றது. மேலிருந்து கீழாகத் தொங்கவிடப்பட்டுள்ளது.

இதனூடாகக் டிக்சித் தருகின்ற மாற்றுக் கருத்துக்கள் ஒருவரை ஒரு மாற்று உலகொன்றினைத் தரிசிக்கச் செய்கின்றது. இதனை ஆக்கவியலின் மாற்றுக் கொள்கை தொடர்பான தேடலில் லயித்து நிற்கச் செய்கின்றது.

சர்ச்சைக்குரிய ஊடகவியலாளரும் செயற்பாட்டாளருமான டிக்சித் நேபாள மக்கள் முன்னணிகளில் மிக முக்கியமான பங்கினை வகிக்கிறார். அவரது பணி நேபாள பாராளுமன்ற ஜனநாயகத்தின் வரவேற்பினையும் பெற்றுள்ளது.

ஏற்புடைமை கிடைத்தாலும், ஹிமாலயத் தேசத்தில் எல்லாமே சீராக நடக்கிறது என்பதற்கில்லை. ஜனநாயம் இன்னும் சரியான பாதைக்கு வரவில்லை. ' நேபாளம் கடந்த பல காலமாக மன்னராட்சிக்கு உட்பட்டிருக்கின்றது. அது சாதாரண மக்களின் குரல்களை உள்வாங்கவில்லை. ஜனநாயகம் என்பது ஒரு எண்ணக்கரு என்றமையில் இணைக்கப்பட்டக் கூடாது. மாறாக அது ஒரு யதார்த்தம் என்றும் மக்கள் உடைமை என்றும் விளங்கப்பட வேணடும்'

'நேபாளிகளுக்கு ஜனநாயகத்தின் சுவை பற்றிய ஒரு கருத்தும் இல்லை என்றே நான் கருதுகின்றேன். முழு மக்களினதும் தேசத்தின் பல்வகைத் தன்மையினதும் ஆதரவையும் விரும்பினையும் இழந்த நிலையில் அவர்கள் ஆளப்பட்டனர். ஜனநாயம் மக்களிமிருந்து வேர்விட்டு வருகின்றது. எனவே, அது மக்களுக்குத்தான் சொந்தமானது என்று நம்புகின்றேன். அரசாங்க், நிர்வாகத்துறை அதிகாரத்தின் உண்மையான மூலம் மக்களிடமிருந்தே வேர்விடுகின்றது. அது அவர்களுடையது: அவர்களுக்கே சொந்தமானது"

Image: Prabin 's Picasa Gallery

சர்வசேத ரீதியில் பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்ற எழுத்தாளரான டிக்சித் நேபாள சமூகத்தில் இன்னும் மாற்றங்கள் வரவேண்டும் என விருப்புகின்றார். இந்த நிலைமாற்றம் ஒரு பொற்காலத்தின் முடிவாக அமைகின்றது. இதனை பூரணப்படுத்த மக்கள் ஒன்றுபட வேண்டியிருக்கின்றது. இது முற்றிலும் மக்களுக்குச் சொந்தமானது' என்றும் கூறுவார்.

தெற்காசியாவில் ஒரு ஊடகவியலாளராக, சினிமா டுபாட்டாளராக டிக்சித் தனது ஜனநாயக சேவை மற்றும் தனாடருவாக்கம் என்பவைற்றை மேற்கொண்டுள்ளார். அவரது பணிகள் மிகவும் ஆக்கத்திறன் பொருந்தியிருப்பதுடன் தேசத்தின் தடைகளைத் தகர்த்தெறியவும் செய்கின்றன.

2006ஆம் ஆண்டு மன்னர் கயனேந்திரரவின் ஊடாங்கச் சட்ட உத்தவை பகிஷ்கரித்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். அது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் ஜனநாயகத்தை வேண்டி வரவாற்றை உருவாக்கும் மக்கள் சுனாமிப் பேரலையின் ஒரு பகுதியாக நாம் திரும்பவும் பாதைக்கு வரவேண்டியிருக்கின்றது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

1987ஆண்டு, ஹிமலய சவுந்தரியன் எனும் தாமானதும் சுதந்திரமானதுமான மாதாந்த சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்தார். அது தெற்காசிய நோக்குதலுடன் கூடிய ஆழமான சமூகக் கலாசாப் பிரச்சனை தொடர்பான விமர்சனங்களைத் தாங்கிவந்தது. நேபாளக் கலாசாரத்தின் குறிகாட்டி இன்னும் தெற்காசிய அடயாளமாகவே இருக்கின்றது. டிக்சித் பீஸ்ம் சவுந்தரியா (FSA) யினையும் தாபித்தார். இதனால், உலகெங்கிலும் உள்ள குறும்படத் தயாரப்பாளர்களை ஹிமலயத் தலைநகருக்கு ஈர்திழுத்தார்.

2005இற்குப் பிந்திய சிவில் சமூகத் தளத்தின் இணைத் தாபகரான டிக்சித் ஜனநாயக ஆதரவுப் பிரச்சாரங்களில் மிக முக்கியமான பங்கினை வகித்தார். அடக்குதலுக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் எதிராக உழைத்தார். இத்தகைய தனித்துவமிக்க சேவைக்கள் பாராட்டப் பட்டதன் பெதுவிவாதங்களையும் பொதத்தளங்களையும் உருவாக்கியமைக்காக கௌரவமிக்க Prince Claus விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

வெளிவந்திருக்கின்றது 18ஆவது திருத்தச் சட்டம் மீதான கண்ணோட்ட அறிக்கை

அரசியல் யாப்பின் 18.ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான கண்ணோட்ட அறிக்கையினை இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் நிறுவனம் வெளியிட்டுக்கின்றது. இது சட்டவாக்க முறைமை முற்றிலும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேணடியதன் அவசியம், பொதுமக்கள் விவாதத்திற்கு போதிய கால எல்லையை வழங்குதல் ஆகியவற்றை நோக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இக்கண்ணோட்ட அறிக்கையில் தகவல் சாசனத்திற்கான உரிமை அரசின் சகல பாகங்களையும் தழுவிய நிலையில் வெளியிடப்பட வேணடும் என்பதையும் அது முற்றிலும் மக்களின் அங்கீகாரத்திற்காக விடப்பட வேணடும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இத்தகையதொரு சட்டமுறையுடன் கூடிய தீர்மானம் ஒரு திறந்த நீதிமன்றத்தின் வாயிலாக வெளியிடப்பட வேணடும் என்றையும் அவ்வறிக்கை வித்துரைக்கின்றது.

17.ஆவது திருத்தச் சட்டத்தன் கீழ் கொணடுவரப்பட்ட யாப்புக்கான வரையமறையுடன் கூடிய அதிகார வழங்கலை மீணடும் கொணடுவருவதற்கான அரசியல் யாப்பின் 18.ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான கண்ணோட்ட அறிக்கையினை இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் நிறுவனம் வெளியிட்டுள்ளது. (மாற்றாக, பொதுமக்கள் 18ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டி 17ஆவது அரசியல் யாப்புக்கு இசைவாக அதனை மேலும் திருத்துவது பற்றி மக்களுக்கு அறிவூட்ட வேணடியிருக்கின்றது)" என்று கண்ணோட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அத்தந் சியாரிச சகல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும், முக்கியமான பதிவிகளுக்கும் உரிய அதிகாரிகளை தெரிவு செய்யும் போது கடைப்பிடிக்க வேணடிய விதிமுறைகள தொடர்பாக கூறுகின்றது. இதற்கேற்ப, இத்தகைய நியமனங்களில் ஆக்கபூர்வமான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேணடும் எனவும், இப்பதவிகளின் பொருத்தப்பாடு, நேர்மைப்பாடு தொடர்பாக மக்கள் மட்டப் பரிசோதனை ஒன்று அவசியம் என்றும் குறிப்பிடுகின்றது.

பார்க்க www.tisrilanka.org

தேர்தல் காலத்தில் நேர்மையை தக்கவைத்துக் கொள்ளுதல்

Image: http://article.wn.com

- எதிர்காலத்தில் சகல தேர்தல்ளையும் பொறுப்புள்ள அரசாங்கத்தின் கீழ் நடாத்துதல்
- சுயாதீனமானமும் செயற்திறன் மிக்கதுமான தேர்தல் ஆணைக்குழு வொன்றை உடனடியாக நியமித்தல்
- தேர்தல்காலத்தில் பொதுமக்களின் சொத்துக்களுக்கு இழைக்கப்படும் அழிவுகள் குறித்து விசாரிக்கும் சுயாதீன ஆணைக்குழு ஒன்றினை நியமித்தல்
- இலஞ்சம், பொலிஸ் மற்றும் பொதுசேவைகள் தொடர்பான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல்

அண்மையில் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனத்தின் தேர்தல்களைக் கணகாணிக்கும் பிரிவு, பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதுகான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தனது இறுதி அறிகைகயை வெளியிட்டது. அதிலிருந்து சில சிபாரிகளே மேல இடம்பெற்றன.

பொதுமக்களின் சொத்துக்களை பாதுகாக்கும் நிகழச்சித் திட்டம் ஜனாதிபதியும் அமைசரவையின் அங்கத்வர்களும் மாத்திரம் பொறுப்புமிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேணடும் என்னும் அமைச்சரவை சாராத அமைச்சர்கள், பிரதியமைசர்கள் இதில் இடம்பெற வேணடியதில்லை எனவும் கூட்டிக்காட்டுகின்றது. அத்தோடு, ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பொறுப்பில் உள்ள ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை உறுபபினர்கள் மாத்திரம் தேர்தலைப் பாதிக்காத விதத்திலான செயன்முறைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்வகையில் ஒழுங்குகள் செய்யப்பட வேணடும். ஜனாதிபதி அல்லது அமைச்சரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது வேறு யாராவது ஒரு வேட்பாளர் கலந்துகொள்ளும் எந்தவொரு அளவிலான பொதுவிழாக்களும் பொதுமக்களின் செலவில் இடம்பெறக்கூடாது என்றும் வித்துரைக்கப்படுகின்றது.

மேலும் விளக்குகையில், நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலை உறுதிபடுத்தும் பொருட்டு, தேர்தல் ஆணையாளர் எந்தவொரு ஆணையையும் பொறுப்புமிக்க அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினருக்கும் பிறப்பிக்கூடியவ அதிகாரத்தை வழங்க வேணடும் என்றும் பரிந்துரைக்கப்படுகின்றது.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளின் தேர்தல்களின்போது வேட்பாளர்களாக வருபவர்கள் தேர்தல் அலுவலகங்கள் அமைப்பதற்கு தடைவிதிக்க வேணடும்.

பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் பொதுமக்களின் சொத்துக்கள் மிகமோசமான முறையில் பயன்படுத்தப்பட்டமையை அழுத்திக்கூறும் இவ்வறிக்கை வற்புறுத்தலின் பேரில் பொதுமக்களின் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதுகவும் இதனால் சகல தேர்தல்களிலும் நேர்மைத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றது.

அறிக்கையைப் பார்வையிட பார்க்க – www.tisrilanka.org

அதிகரித்துவரும் ஊழல் சுட்டெண்

Image: http://www.transparency.org

2010.ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஊழல் அறிவுச் சுட்டெண் (CPI) வெளிவந்துள்ளது. இலங்கை கடந்த ஆண்டிலும் பார்க்க அதன் கடைப்புள்ளியை 0.1 புள்ளியினால் அதிகரித்து. மொத்தமாக 3.2 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 178 நாடுகளுக்குடையில் எடுக்கப்பட்ட கணியிடுதலில் இலங்கை 91ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. பொதுத்துறையில் மேற்கொள்ளப்படும் ஊழல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சுட்டெண் தயாரிக்கபடட்டுள்ளது. இந்தச் சுட்டெண்ணை உலலில் ஊழலுக்கு எதிராகச் செயற்படும் முன்னணிச் சர்வதேச நிறுவனமான ட்ரான்ஸ்பேரன்சி இன்டநேஷனல் மேற்கொணடுள்ளது.

இலங்கையுடன் சேர்த்து இன்னும் ஆறு நாடுகள் ஒரு குழுவில் இடம்பெறுகின்றன. இவற்றுள் பொலிவியா மற்றும் ஹொந்தகோவினியா, டிஜிபோட்டி, காம்பியா, கௌதமாலா, கிரிபாட்டி மற்றும் ச